செய்தி வெளியீட்டு எண்–574 நாள்–16.7. 2008

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை

மருத்துவமனைகளிலும் / ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நாய் கடிக்கு மருந்து இருப்பு இல்லையென பத்திரிக்கைகளில் அவ்வப்போது செய்திகள் வருகின்றன. தமிழ் நாடு மருத்துவ சேவைக் கழகம் தேவையான அளவுக்கு நாய் கடிக்கான மருந்து கொள்முதல் செய்து, மருத்துவமனைகளுக்கும் / ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கி வருகிறது. மாவட்ட மருந்து கிடங்குகளில் இரண்டு மாதத்திற்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. எல்லா மருத்துவமனைகளிலும் / ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தேவையான அளவுக்கு மாவட்ட மருந்து கிடங்குகளிலிருந்து மருந்து பெற்று மருத்துவமனைகளில் 15 நாள் மருந்து இருப்பு வைக்க தேவையான அறிவுரை மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

2. சில மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்க்கடிக்கு ஊசி போடக் கோரி வரும் நோயாளிகளிடம் குடும்ப அட்டை, வருமான சான்று போன்றவைகளை கேட்டு திருப்பி அனுப்பப்படுவதாக அரசுக்கு தகவல்கள் வருகின்றன. அரசு அப்படி ஒரு நிபந்தனையை விதிக்காத போது, மருத்துவமனைகளில் சான்று வலியுறுத்துவது தவறானதாகும். எனவே மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நாய்க் கடிக்கு மருந்து கோரி வரும் நோயாளிகளிடம் சான்றிதழ்களை கோரக் கூடாது எனவும், நாய் கடிக்கு ஊசி போட கோரி வரும் அனைவருக்கும் சான்றிதழ்கள் ஏதும் கோராமல் மருந்து அளிக்க வேண்டுமென மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்கள், மருத்துவ கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட சுகாதார இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3. மருத்துவமனைகள் மற்றும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நாய்க்கடி மருந்து தேவையான அளவுக்கு இருப்பில் உள்ளது.

* * * * * * *

**வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**